REGISTRAR OF NEWS PAPER FOR INDIA REGN. NO. 15261/2005 (R.DIS NO.1834/04) 5 PAGES பக்கம் 1

# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

FILM - 22 JULY 2025 CLICK - 04 ₹. 1

### அறிவிப்பு

60 வயதுக்கு உட்பட்டவர்கள் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தில் இணைந்து குடும்ப பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு

**P. துரைபாபு**

CVPA செயலாளர்

## சென்னை புரசைவாக்கம், தர்ம பிரகாஷ் திருமண மண்டபத்தில் CVPA–ன் 28வது பொதுக்குழு கூட்டம் 13.08.2025 அன்று கூடுகிறது.!

CVPA உறுப்பினர்களுக்கு வணக்கம்!

24.07.2025 அன்று நமது சங்கத்தின் செயற்குழு கூடி, CVPA வின் 28 வது பொதுக்குழு கூட்டத்தை நடத்த அனுமதி அளித்தது. அதன் அடிப்படையில் வரும் 13.08.2025 புதன் கிழமை அன்று சென்னை, புரசைவாக்கம், தர்ம பிரகாஷ் திருமண மண்டபத்தில் காலை 10 மணி அளவில் பொதுக்குழு கூட்டம் நடைபெற உள்ளது. இந்த பொதுக்குழு கூட்டத்திற்கு, CVPA தலைவர் திரு.புருஷோத்தமன் அவர்கள் தலைமை ஏற்று நடத்துகிறார். செயலாளர் திரு. துரைபாபு அவர்கள், கடந்த ஓர் ஆண்டில் நடைபெற்ற CVPA செயல்பாடுகள் குறித்து தனது விரிவான செயல் அறிக்கையை வாசிக்கிறார்.திருமதி.கௌரி பார்த்தசாரதி அவர்கள்,2024-2025 ஆம் ஆண்டின் பொருளாளர் அறிக்கையை சமர்ப்பிக்க இருக்கிறார். நமது சங்கத்தின் பிஆர்ஓ திரு.பாலச்சந்தர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகிறார். இதனை தொடர்ந்து நமது சங்கத்தின் முன்னாள் நிர்வாகிகள் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

CVPA வில் ரெனிவலில் உள்ள எல்லா பொதுக்குழு உறுப்பினர்களும் பொதுக் குழுவில் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. பொதுக் குழு உறுப்பினர்களிடம் அனுமதி பெற்று பல்வேறு முக்கிய தீர்மானங்கள் இந்த பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ளன. எனவே, ரெனிவலில் உள்ள அனைத்து பொதுக் குழு உறுப்பினர்களும் பொதுக் குழு கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு CVPA NNT திட்டம், பெரும்பான்மையான சங்க உறுப்பினர்களின் அமோக ஆதரவுடன்,புதிய CVPA NNT உறுப்பினர் சேர்க்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. இதுவரை நமது சங்கத்தை சேர்ந்த சுமார் 700 குடும்பங்கள் CVPA NNT திட்டதின் கீழ் பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர். ஆயிரம் ஒளிப்பதிவாளர் குடும்பங்களை இணைப்பது என்பது நம் இலட்சியம்.இதை முடித்து காட்டுவோம் நிச்சயம்.நமக்கு நாமே CVPA NNT திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடந்து முடிந்த பை அன் செல் எக்ஸ்பொசனை நாம் சரியாக பயன்படுத்திக் கொண்டோம். இங்கு நமது சங்கத்தை சேர்ந்த 26 உறுப்பினர்கள் நமக்கு நாமே திட்டத்தில் புதிய உறுப்பினர்களாக இணைந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். எக்ஸ்பொசன் நடந்த அரங்கத்திற்குள் நெட்வொர்க் பிரச்சினை இருந்ததால் நிறைய உறுப்பினர்கள் பணம் செலுத்த சிரமப்பட்டனர். இது CVPA NNTயில் உறுப்பினர்கள் சேர்க்கைக்கு சற்று இடையூறாக இருந்தது. இல்லையென்றால் இன்னும் எண்ணிக்கை உயர்ந்திருக்கும்.

கடந்த மாதத்தில் திரு.கமலக்கண்ணன், திரு.ராஜாராம் என்கிற பாண்டியன் ஆகிய இரண்டு CVPA NNT உறுப்பினர்கள் உயிர் நீத்தார்கள். இவர்களின் குடும்பங்களுக்கு CVPA NNT நிதியில் இருந்து திரு. கமலக்கண்ணன் குடும்பத்திற்கு 1,13,400 ரூபாயும், திரு.ராஜாராம் என்கிற பாண்டியன் குடும்பத்திற்கு 1,14,800 ரூபாயும் கொடுக்கப்பட்டது.இது இவர்கள் இறந்த தினத்தன்று CVPA NNT யில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை பொறுத்து மாறுபடும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

பொதுக்குழு கூட்டம் குறித்து அறிவிப்பு மற்றும் அழைப்பிதழ் ஆகியவை பொதுக் குழு உறுப்பினர்களின் விலாசத்திற்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தவறாமல் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு

**P. துரைபாபு**

CVPA செயலாளர்

---

## சென்னை வீடியோ - புகைப்பட கலைஞர்கள் சங்கம்

எண்.51/24, பங்காரு தெரு, எல்லீஸ் ரோடு, சென்னை - 2.

E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in **Cell : 7824034734**

**Regd No. : 446/96**

24.07.2025

### பொதுக்குழு கூட்டம் அறிவிப்பு

அன்புள்ள சங்க உறுப்பினர்களுக்கு, வணக்கம்.

நமது சங்கத்தின் செயற்குழு கூட்டம் 24-7-2025 அன்று சென்னை, எல்லீஸ் ரோடு, பங்காரு தெரு, பாவ்சார் மராட்டா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த செயற்குழு கூட்டத்தில் நமது சங்கத்தின் 28வது பொதுக்குழு நடத்த ஒப்புதல் வழங்கப்பட்டது.

அதன்படி சங்க உபவிதி 6-3-0யில், குறிப்பிட்டபடி நமது சங்க பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் 21 நாட்களுக்கும் முன்னதாக இக்கடிதம் சுற்றறிக்கையாக அனுப்பபடுகிறது. நமது சங்கத்தின் **28வது பொதுக்குழு கூட்டம் வருகிற 13-8-2025** நடைபெற உள்ளது. காலை 9.00 மணி முதல் தொடங்கும் பொதுக்குழு கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொண்டு, சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். கூட்டத்திற்கு வரும் போது அடையாள அட்டையை தவறாமல் கொண்டு வரவும், அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு கண்டிப்பாக அனுமதி கிடையாது.

**பொதுக்குழு நேரம் : காலை 9.00 முதல்**

**இடம் : தர்மபிரகாஷ் திருமண மண்டபத்தில்,**

**சென்னை - 84,புரசைவாக்கம், எண், 10, ராஜா அண்ணாமலை சாலையில்**

| | |
|---|---|
| காலை 09-00 மணி | வருகை பதிவேடு (உறுப்பினர் அடையாள அட்டை வைத்திருப்பவர்கள் மட்டும்) |
| காலை 10-00 மணி | தமிழ்த்தாய் வாழ்த்து |
| காலை 10-01 மணி | வரவேற்புரை |
| காலை 10-05 மணி | தலைமையுரை |
| காலை 10-15 மணி | வாழ்த்துரை : CVPA முன்னாள் நிர்வாகிகள் |
| காலை 10-30 மணி | செயலாளர் அறிக்கை |
| காலை 11-00 மணி | தீர்மானங்கள் ஒப்புதல் பெறுதல் |
| காலை 11-15 மணி | 2024-2025 ஆண்டு வரவு செலவு கணக்கு சமர்ப்பித்தல் |
| காலை 11-30 மணி | நிதிநிலை அறிக்கை குறித்து விவாதித்தல், ஒப்புதல் பெறுதல். |
| காலை 12-00 மணி | பொது விவாதம் |
| மதியம் 12-30 மணி | மதிய உணவு |

இதனையே அழைப்பாக ஏற்றுக்கொண்டு, ரெனிவலில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் மேற்படி பொதுக்குழு கூட்டத்திற்கு வரும்படி அன்புடன் அழைக்கிறோம்.

குறிப்பு : சங்க செயல்பாடுகள் குறித்து உறுப்பினர்களின் ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் புகார் மற்றும் குறைகளை கடிதம் மூலம் தெரியப்படுத்தவும். இக்கடிதம் உங்கள் பகுதி துணை தலைவர், இணைச்செயலாளர் அல்லது பகுதி செயலாளர் மூலமாக தெரியப்படுத்தவும். இந்த கடிதங்களுக்கு பொதுக்குழுவில் முன்னுரிமை வழங்கப்படும்.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் | P.R.O. |
|---|---|---|---|
| V.புருஷோத்தமன் | P.துரைபாபு | கௌரி பார்த்தசாரதி | V. பாலசந்தர் |





CVPA தலைவர் திரு. புருஷோத்தமன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற சுப நிகழ்ச்சியில் CVPA நிர்வாகிகள், பகுதி செயலாளர், பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட மகிழ்ச்சியான தருணம்.



வடசென்னை, எண்ணூர் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் முனியாண்டி-வாணி இவர்களுடைய திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க நிர்வாகிகள், மற்றும் பகுதி செயலாளர், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.







இந்த மாதம் 20ஆம் தேதி சென்னை நந்தம்பாக்கம் டிரேடு செண்டரில் இமேஜ் டுடே சார்பாக நடைபெற்ற போட்டோகிராபி எக்ஸ்போவில் திரு.அருண்ராஜ் அவர்கள் ஹெலிகேம் எனப்படும் டிரோனை கையாள்வது பற்றிய சிறப்பு பயிற்சி வகுப்பு நடத்தினார்.அவருடன் திருவொற்றியூர் CVPA பகுதி செயலாளர் திரு அவர்களும், நமது சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர் கார்மல் நேவிஷ்குமார் அவர்களின் மகள் பிரிட்னியும் இணைந்து, ட்ரோன் செயல் ஆக்கம் குறித்து தங்கள் அனுபவங்களை மேடையில் பகிர்ந்து கொண்டனர்.

# நமக்கு நாமே திட்டத்தின்கீழ் CVPA NNT நிதியிலிருந்து உயிரிழந்த இரண்டு உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு 2,28,200 ரூபாய் வழங்கப்பட்டது





நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு ( CVPA NNT ) திட்டத்தின் உறுப்பினரும், நமது சங்கத்தின் மூத்த ஆயுட்கால ( ID NO : 0116 ) உறுப்பினரும், தென் சென்னை எஸ்2 கிழக்கு தாம்பரம் பகுதியின் முதல் பகுதி செயலாளராக இருந்து, சிறப்பாக பணியாற்றி, இப்பகுதியில் நற்பெயரும் பெற்றவருமான, திரு. D.கமலக்கண்ணன் (வயது 58) அவர்கள் உடல் நலம் குன்றி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளித்தும், சிகிச்சை பலனின்றி 27.05.2025 அன்று மரணம் அடைந்தார். தகவல் கிடைத்தவுடன் நமது சங்க நிர்வாகிகள் அன்னாரது இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியதுடன், அவரது குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார்கள். மேலும், நமது சங்கத்தின் பொதுக்குழு தீர்மானத்தின்படி மறைந்த CVPA உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை 20,000 ஆயிரம் ரூபாயை திரு.D.கமலக்கண்ணன் அவர்களுடைய குடும்பத்தினரிடம் முறைப்படி வழங்கினார்கள்.

மேலும், D.கமலக்கண்ணன் அவர்கள் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு (CVPA NNT) திட்டத்திலும் உறுப்பினராக இருந்து வந்தார். பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்கிற நல்ல நோக்கத்துடன் CVPA NNT திட்டத்தில் தன்னை அவர் இணைத்துக் கொண்டிருந்தார். ஆனால், அதற்குள் அவரது மரணம், யாரும் எதிர்பார்க்காத வகையில் நிகழ்ந்துவிட்டது. இவருடைய குடும்பத்திற்கு சேர வேண்டிய CVPA NNT நிதியை, CVPA NNT விதிமுறைகளின் படி அவர் இறந்த 30 நாட்களுக்கு பிறகு வழங்கப்பட்டது. மேலும், திரு. D.கமலக்கண்ணன் அவர்கள் இறந்த போது CVPA NNT. திட்டத்தில் 667 பேர் உறுப்பினர்களாக இருந்து வந்தனர். இதில், CVPA NNT விதிமுறைகளின் படி 100 உறுப்பினர்களின் பங்களிப்பு தொகையான 20,000 ஆயிரம் ரூபாயை CVPA NNT திட்டத்தின் உறுப்பினர்களின் எதிர்கால திட்டத்தின் சேமிப்புக்கு எடுத்துக் கொண்டது போக, மீதம் உள்ள தொகையான 1,13,400 ரூபாய் காசோலையை நமது சங்க நிர்வாகிகள், மற்றும் பகுதி செயலாளர்கள் அனைவரும் அவரது இல்லத்திற்கு நேரில் சென்று திருமதி.சுகந்தி கமலக்கண்ணன் அவர்களிடம் காசோலையை வழங்கினார்கள். ஆக மொத்தம் CVPA வழங்கிய ஈமச்சடங்கு தொகையுடன் சேர்த்து திரு. கமலக்கண்ணன் அவர்கள் குடும்பத்திற்கு 1,33,400 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.



நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தின் கீழ் CVPA NNTஉறுப்பினர் திரு.M.ராஜாராமன் என்கிற பாண்டியன் குடும்பத்திற்கு CVPA NNT நிதியில் இருந்து 1,14,800 ரூபாய் வழங்கப்பட்டது!

தென் சென்னை எஸ்-2 மயிலாப்பூர் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் (ID NO:1802) திரு. M.ராஜாராமன் (வயது:47) என்கிற பாண்டியன் அவர்கள் கடந்த மாதம் 14.06.2025 அன்று மாரடைப்பின் காரணமாக மரணம் அடைந்தார். இது இப்பகுதியில் உள்ள சங்க உறுப்பினர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. தகவல் அறிந்த உடன் நமது சங்க நிர்வாகிகள், மற்றும் பகுதி செயலாளர், பொதுக்குழு உறுப்பினர்கள் அன்னாரது இறுதி சடங்கில் கலந்து கொண்டு அவரது குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார்கள். நமது சங்கத்தின் சார்பில், பொதுக்குழு தீர்மானபடி மறைந்த உறுப்பினர்களுக்கு



வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை 20,000 ஆயிரம் ரூபாயை திரு.M.ராஜாராமன் என்கிற பாண்டியன் குடும்பத்தினரிடம் முறைப்படி சங்க நிர்வாகிகள் ஒப்படைத்தார்கள்.

மேலும் திரு.M.ராஜாராமன் என்கிற பாண்டியன் அவர்கள் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு CVPA NNT திட்டத்திலும் உறுப்பினராக இருந்து வந்தார். பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்கிற நல்ல எண்ணம் கொண்டவர் திடீரென மாரடைப்பால் மரணம் அடைந்தது விட்டார். நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தின் CVPA NNT கீழ் இவரது சேர வேண்டிய நிதியை CVPA NNT விதிமுறைகளின் படி அவர் இறந்த 30 நாட்களுக்கு பிறகு வழங்கப்பட்டது. மேலும் திரு. ராஜாராமன் என்கிற பாண்டியன் அவர்கள் இறந்த போது CVPA NNT திட்டத்தில் 674 பேர் உறுப்பினர்களாக இருந்தனர். இதில் 100 உறுப்பினர்களின் பங்களிப்புத் தொகையான 20,000 ஆயிரம் ரூபாயை CVPA NNT உறுப்பினர்களின் எதிர்கால சேமிப்பு திட்டத்திற்கு எடுத்துக் கொண்டது போக, மீதம் உள்ள தொகையான1,14,800 ரூபாய் காசோலையை திருமதி.M. சொர்ணவல்லி பாண்டியன் அவர்களிடம் சங்க நிர்வாகிகள் முறைப்படி ஒப்படைத்தார்கள். ஆக மொத்தம் CVPA ஈமச்சடங்கு தொகை 20,000. ஆயிரத்துடன் சேர்த்து, இந்த குடும்பத்திற்கு 1,34,800 ரூபாய் வழங்கப்பட்டது.

## நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டம்

CVPA உறுப்பினர்களே!

நமக்கு நாமே பாதுகாப்பு திட்டம் நமக்கானது என்பதை விட நமது சக கலைஞனின் குடும்ப பாதுகாப்பிற்கானது என்ற எண்ணம் நமக்குள் ஏற்பட வேண்டும். கருணை உள்ளம் கொண்ட ஆயிரம் உறுப்பினர்களை இத்திட்டத்தில் இணைப்பதன் மூலம், நமது சக கலைஞனின் குடும்ப பாதுகாப்பிற்கு இரண்டு லட்சம் ரூபாய் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். இதற்காக நாம் குறைந்தபட்சம் ஆயிரம் போட்டோ வீடியோ கலைஞர்களின் குடும்பங்களை நமது சங்கத்தின் பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டு வருவோம். ஒன்றிணைப்போம். ஒன்றுபடுவோம்.

CVPA NNT

Regd No. : 446/96

# சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம்

எண்.48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-600002. Cell : 7824034734
E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in

# நமக்கு நாமே
# குடும்ப நல பாதுகாப்பு திட்டம்

## சென்னை வீடியோ போட்டோ கலைஞர்களின் குடும்ப நலன் கருதி

## CVPA உருவாக்கியுள்ள நமக்கு நாமே திட்டத்தில்

## இன்றே இணைந்து உங்கள் குடும்ப பாதுகாப்பிற்கு

# 2 லட்சம் ருபாய்

(*நிபந்தனைக்கு உட்பட்டது)

மேலும் விவரங்களுக்கு

| தலைவர் | செயலாளர் |
| --- | --- |
| V. புருஷோத்தமன் | P. துரைபாபு |
| 7010936732 | 92821 64723 |

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Mukhtharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351